பிரைம் கிராமின்

# மெஹெவர

இருள் நீக்கும் உன்னத பணி

3 ஆம் தொகுதி - ஏழாவது இதழ் - 2015 மார்ச்




வெற்றிக் களிப்பு பக்கம் 03



திருமதி சுபாஷினி தமயந்தி
பிரைம் கிராமின் கம்பஹா கிளை அங்கத்தவர்
படப்பிடிப்பு: லக்ஷ்மன் குமாரதுங்க

HNB "Prime Grameen is a subsidiary of Hatton National Bank PLC"

# உங்களுக்கு தெரியாத நான்



**ஆனந்தக் கண்ணீர் பெருகும் பசுமையான அந்தநாள் நினைவுகளை மீட்டுப் பார்க்கும் அளவுக்கு வாழ்க்கையில் எவ்வளவு தூரம் பயணித்துள்ளோம் என்பது புரியும். . . . ஒவ்வொரு நாளும் காலையில் சந்தித்து மாலையில் பிரிந்து தங்களது குடும்பத்தாருடன் சங்கமிக்கும் இந்த வாழ்க்கை எமக்கு தினமும் நிகழும். . . பார்க்கும் . . . பேசப்படும் . . . எங்களின் அன்பான நண்பர்களின் வாழ்க்கையைப் பற்றி . . . எண்ணங்கள் தொடர்பாக உண்மையாக எதனை அறிந்து வைத்துள்ளோம். . .? “உங்களுக்கு தெரியாத நான்” வாசித்து சிரிப்பதற்காக அல்ல, உங்கள் அருகில் உள்ள நண்பர்களின் வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்வதற்காகும். நாம் எம்மைப் பற்றி மீண்டுமொரு முறை மீட்டுப் பார்ப்போம் . . . அதற்காகத்தான் இந்தப் பகுதி . . .**

## அன்று இரவு நாம் அனைவரும் அங்கிருந்து செல்லாதிருந்தால் உயிரிழந்திருக்கக்கூடும்

**சுரங்க நிரோஷன் ஹேரத்**
**முகாமையாளர் - நகரக் கிளை**





அன்று இரவு நாம் அனைவரும் அங்கிருந்து செல்லாதிருந்தால் உயிரிழந்திருக்கக்கூடும்

சுரங்க நிரோஷன் ஹேரத்

முகாமையாளர் நகரக் கிளை

ஆனந்தக் கண்ணீர் பெருகும் பசுமையான அந்தநாள் நினைவுகளை மீட்டுப் பார்க்கும் அளவுக்கு வாழ்க்கையில் எவ்வளவு தூரம் பயணித்துள்ளோம் என்பது புரியும். . . . ஒவ்வொரு நாளும் காலையில் சந்தித்து மாலையில் பிரிந்து தங்களது குடும்பத்தாருடன் சங்கமிக்கும் இந்த வாழ்க்கை எமக்கு தினமும் நிகழும். . . பார்க்கும் . . . பேசப்படும் . . . எங்களின் அன்பான நண்பர்களின் வாழ்க்கையைப் பற்றி . . . எண்ணங்கள் தொடர்பாக உண்மையாக எதனை அறிந்து வைத்துள்ளோம். . .? “நீங்கள் அறியாத நான்” வாசித்து சிரிப்பதற்காக அல்ல, உங்கள் அருகில் உள்ள நண்பர்களின் வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்வதற்காகும்.

நாம் எம்மைப் பற்றி மீண்டுமொரு முறை மீட்டுப் பார்ப்போம் . . . அதற்காகத்தான் இந்தப் பகுதி . . .

முழுப் பெயர்: ஹேரத் முதியான்சலாகே சுரங்க நிரோஷன் ஹேரத்

பிறந்த திகதி

பிடித்த பாடசாலை: நான் ஒரே ஒரு பாடசாலைக்கே சென்றேன. மொ.ஃ. கொட்டுமுதன மகா வித்தியாலயமாகும். மொனராகலை மாவட்டத்தில் வசதிகள் குறைந்த சிறிய பாடசாலையாகும். பாடசாலையில் பிரதான கட்டிடங்கள் மூன்று மாத்திரமே சீமேந்தினால் கட்டப்பட்டிருந்தன. ஏனைய அனைத்தும் மரப்பலகையினால் நடப்பட்ட தற்காலிக கொட்டில்களைப் போன்று இருந்தது. அந்தப் பாடசாலையில் 400 மாணவர்கள் கல்வி பயின்றனர். அது ஒரு கலவன் பாடசாலையாகும்.

எனது வீட்டில் இருந்து மூன்றரை கிலோமீற்றர் தூரத்தில் பாடசாலை அமைந்திருந்தது. பாடசாலைக்கு செல்வதற்கு என்று தனியான பாதையொன்று இருக்கவில்லை. குறுக்கு வழியாக, புல்பூண்டுகள் நிறைந்த சேற்று மண் கொண்ட பாதையிலே நாம் பாடசாலைக்கு சென்றோம்.

மழைக்காலங்களில் முட்டுக்கால் வரை நீளக்காற்சட்டையை மடித்துக் கொண்டு சென்றாலும் நாம் அணியும் செருப்பினால் தெளிக்கப்படும் சேற்று நீர் எமது சட்டைகளை பிரவுன் நிறமாக்கிவிடும். புத்தகங்களை பொலித்தின் பையில் போட்டுச் செல்வதால் புத்தகப்பை செலவு இருக்கவில்லை...

துறை: பௌத்தபாடம் விருப்பமான பாடமாகும்

விளையாட்டு: கரப்பந்து. . . பாடசாலைக்கு ஒரே ஒரு பந்து மாத்திரமே இருந்தது. மிகவும் கஷ்டப்பட்டு அந்தப் பந்தை பாதுகாத்து வந்தோம். ஏனெனில் புதிய பந்தை வாங்குவதற்கு பல காலம் எடுக்கும் என்பதனாலாகும்.

பாடசாலைக்காலத்தில் மறக்க முடியாத சம்பவங்கள்: எனது ஞாபகத்துக்கு வரும் ஒரு விடயம்தான், நான் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு மேலதிக வகுப்புகளுக்கு சென்று பாடம் படிக்கவில்லை. அவ்வாறே செல்ல வேண்டுமானால் சுமார் 30 முதல் 40 கிலோமீற்றருக்கு அப்பால் சென்று தான் கற்க வேண்டும். எமது வகுப்பாசிரியர் எமக்கு மாலை நேரத்தில் இலவசமாக கற்றுக் கொடுத்தார். இக்காலப்பகுதியில் எமது பாடசாலைக்கு புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக டிரெக்டர் வண்டியில் கருங்கற்கள் கொண்டு வரப்பட்டன. மாலை நேர வகுப்பு முடிந்து வீட்டுக்குச் செல்லும் போது கல் கொண்டுவந்த டிரெக்டர் வண்டி கற்களை இறக்கவிட்டு மீண்டும் செல்ல இருந்தது. அதில் ஏறினால் எமது வீட்டின் அருகே இறங்கி விடலாம். . . எமது நண்பர்கள் அனைவரும் ஓடிச் சென்று டிரெக்டர் பின்னால் ஏறிக் கொள்ள முயற்சித்த போதும் என்னால் மாத்திரமே அதில் ஏறக்கூடியதாக இருந்தது. நான் டிரெக்டர் பெட்டிக்கு உள்ளே சென்று விட்டேன். டிரெக்டர் வேகமாக சென்றது. தனியாக நான் மட்டும் இருப்பதால் எனக்கு பயமாக இருந்தது. . . எதுவும் யோசிக்காமல் டிரெக்டரில் இருந்து கீழே குதித்துவிட்டேன். கீழே விழுந்ததால் எனது கை, கால்களில் பாரிய காயங்கள் ஏற்பட்டன. பாடசாலையில் ஓடிச் சென்றதால் காயங்கள் ஏற்பட்டன என்று அம்மாவிடம் சொல்லி தப்பித்துக் கொண்டேன். உண்மையை சொல்லியிருந்தால் வீட்டில் அடிதான் விழுந்திருக்கும்.

பாடசாலைக்காலத்தில் எதிர்கால இலட்சியமாக இருந்தது?

எனது பெற்றோர்களான அம்மாவும், அப்பாவும் விவசாயத்துறையை பிரதான தொழிலாக செய்து வந்தார்கள். எனது தந்தை தரம் நான்கு வரை மாத்திரமே கல்வி கற்றிருந்தார். எங்களுக்கு முடியாமல் போன கல்வியை நீங்களாகவது சிறப்பாக முன்னெடுக்குமாறு தந்தை அடிக்கடி கூறுவார். எனது மனதில் என்ன தொழில் செய்ய வேண்டுமென்ற கனவு இருக்கவில்லை. எனினும் தாய், தந்தையரை நன்றாக பராமரிக்கும் அளவில் நல்ல தொழிலில் ஈடுபடுவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது.

முதலாவது தொழிலை பெற ஏற்பட்ட சிரமம்: அம்மாவின் தந்தை மஹரமகவில் திருமணம் முடித்திருந்தார். எனது சித்தப்பா அங்கிருந்து வாழைக்குழைகளை எடுத்துச் செல்வதற்காக மொனரகலைக்கு வாகனத்தில் வருவார். அவர்தான் என்னை கொழும்புக்கும் அழைத்து வந்தார். நான் கொழும்புக்கு வந்து சித்தப்பாவின் கடையில் இருந்தேன். சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொண்டேன். எனது நண்பரின் மூலமாக கொரியன் திட்டமொன்றில் நாளாந்த சம்பளத்துக்கு வேலையொன்று கிடைத்தது. நாங்கள் வீடுகளுக்கு சென்று தொலைபேசி இணைப்புகளை வழங்கும் வேலையே எனக்கு வழங்கப்பட்டிருந்தது. எனது வேலையைப் பார்த்து எனக்கு கீழ் ஒரு குழுவை அந்நிறுவனம் நியமித்தது. என்றாலும் சில மாதங்களிலேயே அந்தத் திட்டம் முடிவுற்றது. அதன் பிறகு தொழில் இல்லாமல் இருந்தேன். எனது சித்தப்பாவின் வீட்டில் வாடகைக்கு இருந்த ராஜ் தசநாயக்க அவர்களிடம் தொழில் ஒன்றை தேடித்தருமாறு கூறினேன். அவரின் சிபாரிசில் 2003ஆம் ஆண்டு எனக்கு செலின்கோ கிராமின் நிறுவனத்தில் தொழில் கிடைத்தது. நகரக் கிளைக்கு 2004ஆம் ஆண்டு ஜனவரி29ஆம் திகதி காரியாலய உதவியாளர் பதவி எனக்கு கிடைத்தது. காரியாலயத்தை துப்பரவு செய்வது முதல் அனைத்து மத்திய நிலையங்களுக்கும் சென்று பணத்தையும் வசூலிக்க வேண்டும். நிறுவனத்தின் சகல வேளைகளும் எனது பொறுப்பென்று நினைத்து நான் தொழில் செய்து வந்தேன். அதனால் இரண்டு மாதங்கள் நிறைவடைய முன்னர் நகரக் கிளையின் சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தராக பதவி உயர்வு பெற்றேன்.

வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம்: அது 89ஆம் ஆண்டு காலப்பகுதியாகும். வன்முறைகள் எமது கிராமத்தையும் விட்டு வைக்கவில்லை. எனக்கு அப்போது 7 வயது இருக்கும். சிறுவனாக இருந்தாலும் அன்றைய நினைவுகள் இன்றும் ஞாபகத்தில் இருக்கின்றன. அந்தச் சம்பவம் எனது மனதை விட்டு இன்றும் மாறவில்லை. எங்களது வீடு களி மண்ணினால் செய்யப்பட்டு மரக்குற்றிகளால் நடப்பட்ட சிறிய வீடாகும். நாங்கள் சேனைப் பயிர்ச்செய்கை செய்து வருமானம் பெற்றோம்.

அன்றொரு நாள் இரவு எமது வீட்டின் முன்பக்க கதவை உடைத்துக் கொண்டு வந்த கும்பல் ஒன்று எனது தந்தையிடம் இருந்த துப்பாக்கியையும், வாளையும் கேட்டு மிரட்டியது. காட்டு மிருகங்களை விரட்டியடிக்க அரசாங்க அனுமதிப்பத்திரத்துடன் நாங்கள் இதனை வைத்திருந்தோம். வந்தவர்கள் எனது தந்தையிடம் இவற்றை கேட்டார்கள். நான் அதனை உரியவர்களிடம் ஒப்படைத்துவிட்டதாக அவர்களிடம் எனது தந்தை கூறினார். அவர்கள் கண்கள் இரண்டு மாத்திரம் தெரியும் வகையில் முகத்தை மறைத்து இருந்தார்கள். எனது தந்தை அவ்வாறு கூறவே, அப்பாவை கழுத்தைப் பிடித்து வெளியில் இழுத்துச் சென்று கொலை செய்யப் பார்த்தார்கள். அப்போது எனது அம்மாவும், சின்னம்மாவும் அவர்களைப் பிடித்து தள்ளி எனது அப்பாவைக் காப்பாற்றினார்கள். நாங்கள் மீண்டும் வருவோம். உங்களிடம் உள்ள அந்தப் பொருட்களை எடுத்து வைக்கவும் என்று கூறிவிட்டு சென்ற அந்த வார்த்தைகள் இன்னும் எனது ஞாபகத்தில் இருக்கின்றன.

அப்போது நேரம் நள்ளிரவு ஒரு மணி இருக்கும். அந்தக் கும்பல் மீண்டும் வருவதற்கிடையில் வீட்டில் இருந்த பொருட்களை ஒரு சில பைகளிலும், தலையணை உறைகளிலும் போட்டுக்கொண்டு எமது சின்னம்மாவையும் அழைத்துக் கொண்டு கரு இருளில் நிதிகும்பா என்ற காட்டு வழியாக சுமார் ஒன்றரை கிலோமீற்றர் தூரத்தில் உள்ள எமது பெரியம்மாவின் வீட்டில் சென்று தஞ்சமடைந்தோம். அங்கிருந்து செல்லாமல் இருந்திருந்தால் நாங்கள் அனைவரும் கொலை செய்யப்பட்டிருப்போம்.

**வாழ்க்கையில் மிகவும் சந்தோஷமான நாளும் துக்கமான தினமும்?** 2012 ஆண்டு நான் நகரக்

தொடர்ச்சி 9ஆம் பக்கம்

ஆக்கம்
மஞ்சுள பிரபாத்

**ஏதோ இருக்கிறேன், சும்மா இருக்கிறேன் போன்ற வார்த்தைகளை பயன்படுத்தாதீர்கள்**

# பிரைம் கிராமின் வருடாந்த முன்னேற்ற அறிக்கை வெளியீட்டின் போது...

பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறுவனத்தின் வருடாந்த முன்னேற்ற அறிக்கையும் எதிர்கால திட்டம் தொடர்பான ஊழியர் சந்திப்பு 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி நடைபெற்றது. மஹரகம இளைஞர் சேவைகள் மன்ற பிரதான மண்டபத்தில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது. வெகு விமர்சையாக நடைபெற்ற வருடாந்த ஊழியர் சந்திப்பு கடந்த வருடங்களைவிட பல பிரிவுகளைச் சேர்ந்த அதிகளவானோர் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும்.

நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள 48 கிளைகளின் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சேவை நிலையங்களின் ஆயிரத்து நூறுக்கும் மேற்பட்ட ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்கள். இவ்வருட வருடாந்த முன்னேற்ற அறிக்கையின் விசேட அம்சம் யாதெனில் பிரைம் கிராமின் நிறுவனம் ஹட்டன் நஷனல் வங்கியின் இணை நிறுவனமாக செயற்பட ஆரம்பித்த பிறகு நடைபெறும் முதலாவது கலந்துரையாடலாக இருப்பதனாலாகும். பிரைம் கிராமின் நிறுவன புதிய தலைவர் ஜொனதன் அலஸ் அவர்கள் பிரைம் கிராமின் உத்தியோகத்தர்கள் முன்னிலையில் உரையாற்றியமை விசேட அம்சமாகும்.

பிரைம் கிராமின் நிறுவனத்தில் பத்து வருட சேவைக் காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் ஊழியர்களை பாராட்டியமை இவ்வருட ஒன்றுகூடலின் விசேட சந்தர்ப்பமாக கருதப்படுகிறது. இதற்கு மேலதிகமாக சிறந்த வருகையாளர்கள், சிறந்த விற்பனைப் பிரதிநிதி (சேமிப்பு மற்றும் நிலையான) வருடத்தில் வளர்ந்துவரும் நிறைவேற்று உத்தியோகத்தர்கள், வளர்ந்துவரும் கிளை, சிறந்த வெளிக்கள நிறைவேற்று அதிகாரி, சிறந்த மூன்று கிளைகள் ஆகியனவற்றுக்கு பணப்பரிசில்கள் வழங்கப்பட்டன.











நிறுவனத் தலைவர் நிகழ்வில் உரையாற்றும் போது



பத்துவருடங்களை பூர்த்தி செய்தவர்கள் விருதுகளுடன்





தேவைக்கேற்றவாறு தீர்மானங்களை மாற்றிக் கொள்ளும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும்

# பிரைம் கிராமின் கிளையின் செயற்பாடுகள்

பிரைம் கிராமின் கம்பஹா கிளை அறிவுக்கேந்திரம் என்ற நாமத்தைப் பெற்றுள்ள கம்பஹா மாவட்டம் தலைநகரமாக கம்பஹா காணப்படுகிறது. சனத்தொகையுடன் மாவட்ட ரீதியில் 72ஆவது இடத்தைப் பெற்றுள்ள கம்பஹா மாவட்டம் இலங்கையின் மொத்த சனத்தொகையில் 11 வீதமானோர் அதாவது 23இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

நகரமாயமாக்கள் என்ற அடிப்படையில் பாரிய நகரங்கள் உட்பட இன்னும் மாற்றமடையாமல் காணப்படும் கிராமங்களைக் கொண்டுள்ள அழகிய நகரமான கம்பஹா நகரம் மற்றும் அதற்கு அருகாமையில் உள்ள நகரங்களை மையமாகக் கொண்டு பிரைம் கிராமின் கிளை சுமார் சரியாக பத்து வருடங்களுக்கு முன்னர் நிறுவப்பட்டது. அதாவது 2005ஆம் ஆண்டாகும். அன்று கம்பஹா நீதிமன்ற வீதியில் ஆரம்பிக்கப்பட்ட கம்பஹா கிளைக்கு பத்து வருடங்களுக்கு பின்னர் நாம் கடந்த மாதத்தில் ஒரு நாள் அந்தக் கட்டிடத்துக்கு அதன் செயற்பாடுகளை ஆராய்ந்து பார்ப்பதற்காக சென்றோம். இல. 57/1, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா என்ற முகவரியில் சகல வசதிகளுடனும் செயற்பட்டு வரும் பிரைம் கிராமின் கம்பஹா கிளை பிரைம் கிராமின் கிளைகளில் 42ஆவது கிளையாக செயற்பட்டு வருகிறது.

இலட்சக்கணக்கான உதவி பெறும் பெண்களின் வாழ்வில் சுபீட்சத்தை ஏற்படுத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிரைம் கிராமின் நிறுவனம் அந்த உன்னத நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பிரைம் கிராமின் கம்பஹா கிளை மற்றும் அதன் அங்கத்தவர்களை பிரதிவாதிகளாகக் கொண்டுள்ள கம்பஹா கிளை நிறுவனம் தொடர்பாக அதன் முகாமையாளர் குமார துலதுங்க எமக்கு தெரிவித்த விடயங்களை கீழே தருகின்றோம்.

கம்பஹா பல்வேறு தொழில்முயற்சிகள் நடைபெறும் மத்திய நிலையமாக காணப்படுகிறது. அவ்வாறே எமது மத்திய நிலையம் பல்வேறு பிரதேசங்கள் பரந்து காணப்படுகிறது. இந்தப் பிரதேசத்தில் பல்வேறு தரப்பினரால் முன்னெடுக்கப்படும் தொழில்முயற்சிகளில் களிமண் கைத்தொழிலுடன் தொடர்புடைய உற்பத்திகள் பாரிய அளவில் காணக்கூடியதாக இருப்பதுடன் யக்கல, வீரகுல போன்ற பிரதேசங்களிலும், அன்னாசி உற்பத்தி பெலும்மஹரவிலும் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

அவ்வாறே, தொழில்முயற்சியொன்றை ஆரம்பிக்கும் போது ஏனைய பிரதேசங்களைப் போன்று உடனடியாக ஆரம்பிக்க முடியாது. தைக்கப்பட்ட ஆடை உற்பத்தி, பல்வேறு சமையலறை உற்பத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய கைத்தொழில் மற்றும் சில்லறைக் கடை, நெல் உற்பத்தி போன்றன பிரதானமாகும். எமது அங்கத்தவர்கள் இவ்வாறான தொழில் முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் அவற்றை சிறப்பாக கொண்டு செல்வதற்கும் புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்குமான கடன் வசதிகள் மற்றும் ஆலோசனைகளை பெற்றுக் கொடுக்க நாம் என்றும் தயாராக இருக்கிறோம். இன்று வரை எமது 100 மத்திய நிலையங்களின் 3297 பேருக்கு கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களின் தொழில் முயற்சிக்காக வழங்கப்பட்டுள்ள கடன் தொகை 329 மில்லியன் ரூபாவாகும்.

இப்பிரதேசத்தில் பரவலாக காணப்படுகின்றன. கம்பாஹாவில் இருந்து மினுவாங்கொட வீதியின் மினுவாங்கொட வரையும் மறுபக்கமாக கிரிந்திவெல வரையும், கண்டி வீதியில் கடவத்தை, ராகம வரையும் பியகம வீதியில் சியம்பலாபோ வரையும் ஜாஎல வீதியில் தம்மிட்ட வரையான பிரதேசம் வரையும் எமது 100 மத்திய நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன. இந்த மத்திய நிலையங்களின் ஊடாக சிறு தொழில் முயற்சிக்காக நாம் நிறுவனத்தின் அங்கத்தவர்களை இணைத்துக் கொண்டு அவர்களுக்கு கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுக்கிறோம்.

பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட சேமிப்புத் திட்டமானது "யாலு லமா இத்துரும்" சிறுவர் சேமிப்பு கணக்கு, மியுலெசி மகளிர் சேமிப்பு கணக்கு மற்றும் பிரைம் சேமிப்பு கணக்கு போன்ற சகல கணக்குகளும் எமது கிளையில் காணப்படுகின்றன.

எமது அங்கத்தவர்களின் நாளாந்த செலவை ஈடுசெய்யும் வகையில் உடனடியாக வழங்கப்படும் நிவாரணக் கடன் திட்டம் குழந்தைகளின் அன்றாடக் கல்விக்காக வழங்கப்படுகிறது. இதற்கு முறையான வேலைத்திட்டமொன்றையும் முன்னெடுத்து வருகின்றோம். கடந்த காலத்தில் மாத்திரம் 39 மில்லியன் ரூபா அங்கத்தவர்களின் நிவாரணக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. அங்கத்தவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் உதவிக்காக அங்கத்தவர் மற்றும் கடன் பாதுகாப்பு நிதியத்தின் கீழ் அங்கத்தவர்கள் 40 பேருக்காக மரணாதார மற்றும் கொடுப்பனவுகளாக 986190ரூபா பணம் கடந்த காலத்தில் வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம்.

தொழில்முயற்சியை செய்வதற்கு தேவையான கடன் முதல் வழங்கப்பட்டதைப் போன்று அங்கத்தவர்களுக்கு பல்வேறு செயலமர்வு மற்றும் ஆலோசனைச் சேவைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதன் கீழ் கடந்த காலத்தில் எம்மால் பல புதிய தொழில் முயற்சிகளை அறிமுகப்படுத்தும் பயிற்சி நெறிகளும் அவர்களுக்காக செய்து கொடுத்தோம். இதற்கு மேலதிகமாக சமூகப் பாதுகாப்பு, சேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு அங்கத்தவர்களின் முன்னேற்றத்திற்காக கடந்த காலத்தில் செயற்பட்டோம். கம்பஹா நகரத்தைப் பொறுத்தவரையில் நுண்நிதிக் கடனுடன் தொடர்புடைய 10இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. இவ்வாறான நிலை காணப்பட்டாலும் எமது நிறுவனத்தின் மேல் வைத்துள்ள நம்பிக்கையினால் இந்தப் பிரதேசத்தில் இன்றும் முன்னிலையில் இருக்கும் நுண்நிதி நிறுவனமாக செயற்படுவதற்கு வாய்ப்பு கிட்டியுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக எமது அங்கத்தவர்களுக்கு தொழில்முயற்சி கொடுக்கல் வாங்களுக்கு மேலாக சமூக சேவைகளில் ஈடுபடுவதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அங்கத்தவர்களின் குடும்ப எதிர்காலத்தை மேம்படுத்துவதுடன் அதனூடாக நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி நாட்டில் பாரிய மாற்றமொன்றை ஏற்படுத்த பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட் நோக்காகக் கொண்டு செயற்படுவதாகும்.



## போட்டி நிறுவனங்கள் தொடர்ச்சியாக ஆரம்பிக்கப்பட்டாலும் நுண்நிதித் துறையில் எமக்குள்ள மதிப்பு மாற்றமடையப் போவதில்லை

### பிரைம் கிராமின் கம்பஹா கிளை



பிரைம் கிராமின் கம்பஹா கிளை ஊழியர் படை

**பிரைம் கிராமின் கம்பஹா கிளை காரியாலய உத்தியோகத்தர்கள்**

**பிரதேச முகாமையாளர்**
ரொமேஷ் சில்வா
**கிளை முகாமையாளர்**
சஞ்சீவ குலதுங்க
**உதவி முகாமையாளர்**
கயான் சம்பத்
**நிதிப்பிரிவு பிரதானி**
மனோஜ் சிந்தன
**வெளிக்கள உத்தியோகத்தர்கள்**
கிரிஷ்டி ரணசிங்க
நளின் ஆரியரத்ன
டபிள்யு.பீ. எதிரிசிங்க
ஆர்.எம்.எஸ். ரணதுங்க
ரமேஸ் ஜயசுந்தர
கயின் சில்வா
எஸ்.எச்.ஏ. மலித்
தனுஸ்க பெரேரா
உஷான் தரிந்து லியனகே
**கணக்கு உதவியாளர்கள்**
டபிள்யு.எஸ். பெரேரா
எல்.ஏ.எஸ்.ஹேமச்சந்திர
பீ.என். கமகே
இந்திக லால்


ஆக்கம் -
மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
படப்பிடிப்பு
லக்ஷ்மன் குமாரதுங்க



ரொமேஸ் சில்வா
பிரதேச முகாமையாளர்



சஞ்சீவ குலதுங்க
கிளை முகாமையாளர்



கயான் சம்பத்
உதவி முகாமையாளர்



மனோஜ் சிந்தக
கிளை கணக்கு பிரதானி



உபுல ரோஹன
வெளிக்கள முகாமையாளர்

கம்பஹா கிளையின் கண்காணிப்பின் கீழ் செயற்படும் மத்திய நிலையங்கள்

| மத்திய நிலையங்கள் | அங்கத்தவர் எண்ணிக்கை | ஊழியர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கடன் அளவு ரூபா |
|---|---|---|---|
| 100 | 3297 | 17 | ரூ. 329469000 |

பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்
இல. 57/1, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா
தொலைபேசி 0332221041
மின்னஞ்சல் : gampaha@primegrameen.lk


## பிறந்த நாள் வாழ்த்துக்கள் . . .!



**2015 மார்ச் மாதம் 15ஆம் திகதி பிறந்த தினத்தை கொண்டாட உள்ள பிரைம் கிராமின் நிறுவன உபதலைவர் பி.பிரேமலால் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட் பணிப்பாளர் சபை உட்பட உத்தியோகத்தர்கள் தெரிவித்துக் கொள்கின்றனர். . . .**



# வெற்றிக் கொடியின் அருகில்





### நம்பிக்கையுடன் தேவையான நேரத்தில் கடனைப் பெற்றுக் கொள்ள எங்களுக்கு இருமுறை யோசிக்க வேண்டியதில்லை

புடைவையில் தைக்கப்பட்ட உருவங்களை தயாரித்து விற்பனை செய்யும் கைத்தொழிலை வீட்டிலிருந்து செய்வதால் நான் இதனைத் தெரிவு செய்தேன். எமது கடையில் முதன் முதலில் வெளியிலிருந்தே இவற்றை கொண்டு வந்து விற்பனை செய்தோம். அதன் பின்னர் நான் ஐந்து போனிக்கா செய்தேன். எனது கடையில் வைத்தே அதனை விற்பனை செய்தோம். பலகாலமாக இந்தத் தொழிலில் ஈடுபடுவதால் நம்பிக்கையுடன் சரியான நேரத்தில் கடனைப் பெற்றுக் கொள்ள இருமுறை யோசிக்க வேண்டியதில்லை. இன்று எமது கடையில் இருவரை தொழிலுக்கு அமர்த்தியுள்ளோம். இவ்வாறு சரியான பாதையில் பயணிப்பதற்கு பிரைம் கிராமின் நிறுவனத்தினால் கிடைத்த உதவி, ஒத்தாசைகளை என்றும் நான் முழு மனதுடன் போற்றுகின்றேன்.

**சுபாஷினி தமயந்தி**
**அஸ்கிரிய வீதி, அஸ்கிரிய.**

### வாராந்தம் செலுத்தும் கடன் முறை என்பதால் சுமையின்றி இலகுவாக கடன் தொகை செலுத்தக்கூடியதாக இருக்கின்றது

நாம் 2008ஆம் ஆண்டு பிரைம் கிராமின் நிறுவனத்துடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டோம். எமது விவசாயத்துக்கு தேவையான நிதிப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காகவே இணைந்து கொண்டோம். சுமார் 18 வருடங்களுக்கு மேலாக விவசாயத் தொழிலில் ஈடுபட்டு வருமானம் பெற்று வருகிறோம். முதலில் நாங்கள் வெற்றிலை உற்பத்தியில் ஈடுபட்டோம். சுமார் 50 பேர்ச்சஸ் நிலத்தில் அதனை செய்தோம். இந்த உற்பத்தி சிறந்த விளைச்சலை தந்ததால் படிப்படியாக அதிகரித்து தற்போது இரண்டு ஏக்கர் நிலத்தில் வெற்றிலை உற்பத்தி செய்கிறோம். அவ்வாறே அன்னாசி 3 ஏக்கரில் செய்கிறோம். எனினும் அன்னாசி உற்பத்தியின் பயனை ஒன்றரை வருடங்களுக்கு பிறகே பெற்றுக் கொள்ள முடியும். அந்தக் காலப்பகுதியில் நாம் வெற்றிலை, மரவள்ளி போன்ற உட்பட துணைப்பயிர்கள் மூலம் எமக்கு வருவாய் கிடைக்கின்றது.

இந்தக் காலப்பகுதியில் நாம் விவசாயத்துக்கு தேவையான பணத்தையும் ஏனைய முகாமைத்துவ செயற்பாடுகளுக்கான பணத்தையும் கிராமின் கடன் திட்டத்திடம் இருந்து பெற்றுக் கொள்கிறோம். 15,000 ரூபா கடனில் இருந்து இரண்டு இலட்சம் ரூபா வரை கடனாக பெற முடியும். நான் 6 தடவை கடன் பெற்றுள்ளேன். அனேகமாக, நான் கடன் பெற்றாலும் தவணைக்காலத்துக்கு முன்பாகவே பணத்தைச் செலுத்திவிடுவேன். இதற்கு மேலதிகமாக பிரைம் கிராமின் நிறுவனத்தினால் விசேட திட்டமொன்று காணப்படுகிறது. அதுதான் சேமிப்பு பழக்கமாகும். மியுலெஸி சேமிப்பு கணக்கின் ஊடாக எந்நேரத்தில் பணத்தை வைப்பிலிட்டு கவர்ச்சிகரமான வட்டித் தொகையொன்றையும் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பமும் எமக்கு கிட்டியுள்ளது. அவ்வாறே வாராந்தம் தவணைப்பணம் செலுத்தும் முறை. இதனால் எமக்கு தெரியாமலே கடன் தொகையை இலகுவாக செலுத்தும் சந்தர்ப்பமும் எமக்கு கிடைத்துள்ளது.

**ஏ.டபிள்யு.எப்.பி. குமாரி மாரசிங்க**
**இல. 36, மாதெல் கொமுவ, கம்பஹா**


### சிரமமின்றி எமக்கு தேவையான கடனை வழங்குவதற்கு கிராமின் நிறுவனம் தொடர்ந்தும் முயற்சிகளை செய்து வருகிறது



புதிய கண்டி வீதியில் வெலிவேரிய உஸ்வத்த பிரதேசத்தை அண்மித்துச் செல்லும் போது அநேகமான பொருட்கள் காணப்படும் பிரதேசமாக உஸ்வத்த பாம் சந்தியை குறிப்பிடலாம். முட்டை விநியோகத்துக்கு பிரசித்த பெற்ற இடமாக காணப்படும் உஸ்வத்த பாம் உரிமையாளராக பத்மினி பீரிஸ் இருந்து வருகிறார். இவர் பிரைம் கிராமின் நிறுவனத்துடன் பல காலமாக கைகோர்த்து செயற்பட்டுவரும் அங்கத்தவராகும்.

நான் திருமணம் முடித்து இங்கு குடியேற வரும் போதும் எனது கணவர் இந்தத் தொழிலை செய்து வந்தார். எனது கணவர் மறைந்த பின்னர் இந்த பண்ணையை நடாத்திச் செல்லும் பொறுப்பு எனக்கு ஏற்பட்டது. முட்டை பெறுவதற்காக 5000இற்கும் மேற்பட்ட கோழிகள் இந்த பண்ணையில் காணப்பட்டது. அதற்கு மேலதிகமாக பசுமாடு, பன்றி போன்ற கால்நடைகளும் இந்த பண்ணையில் காணப்படுகின்றன. நான் பிரைம் கிராமின் நிறுவனம் தொடர்பாக எனது நண்பியின் ஊடாக தெரிந்து கொண்டேன். நான் கடனைப் பெறுவதற்காக எந்தவொரு வங்கிக்கும் செல்லவில்லை. ஏனெனில் வங்கிக்கு செல்வதென்றால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியேற்படும் என்பதனாலாகும். என்றாலும் நான் கிராமின் நிறுவனத்துடன் 2006ஆம் ஆண்டு முதல் எவ்வித தடையுமின்ற எனது தொழில்முயற்சிக்கு தேவையான கடனைப் பெற்றுக் கொண்டுள்ளேன். 10000 ரூபா முதல் ஆரம்பிக்கப்பட்ட எனது கடன் பெறுகை இன்று வரை 2 இலட்சம் வரை பெற்றுள்ளேன். நான் பிரைம் கிராமின் நிறுவனத்தை மதிப்பதற்கான காரணமாக அங்கத்தவர்களை அலைக்கழிக்காமல், குறைந்த காலப்பகுதியில் தேவையான கடனை விரைவாக அங்கத்தவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதனாலாகும்.

பத்மினி பீரிஸ்
உஸ்வத்தை பண்ணை, உஸ்வத்த - வெலிவேரிய




**சகலதையும் செய்துவிட்டு சந்தோசமாக இருப்போம் என்பவர்களுக்கு என்றும் மகிழ்ச்சியாக இருக்க முடியாது**

# மைக்ரோ பினான்ஸ் நிறுவனத்தின் ஆரம்பமும் நடைமுறையும்

பகுதி 3



பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி சமிந்த பிரபாத் அவர்களுடனான நேர்காணலை கீழே தருகின்றோம்



## இருவரின் முயற்சியினால் கட்டியெழுப்பப்படும் "கிராமிய வங்கி"

நுண் நிதித்துறையில் கடன் வழங்கும் முறையானது காலத்துக்கு காலம் மாற்றங்களுக்கு உட்பட்டு வருவதைக் காணக்கூடியதாக இருப்பதை வரலாற்றை ஆராய்ந்து பார்க்கும் போது தெரிந்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். மக்களின் நிதித்தேவையை மிகவும் இலகுவாக வழங்கக்கூடிய மற்றும் நிலையாக பேணுவதற்கும் முறையொன்றின் அடிப்படையில் இந்தக் கடன் முறை பெற்றுக் கொண்டமையை நாம் வரலாறுகளில் இருந்து படித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. கிராமின் 1 முறையும் இவ்வாறான ஒன்றாக காணப்படுகிறது. இந்தத் திட்டத்தை கைவிட்டு கிராமின் 2 எண்ணக்கரு முறையை பின்பற்ற முடிந்தமை நாம் முன்னர் கடைப்பிடித்த திட்டங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட திட்டமாக காணப்பட்டதாலாகும். அதில் பிரதான ஒன்றாக கருதப்படக்கூடியதுதான் குழுக்களுக்கிடையில் சேமிப்பு நிதியமொன்றை ஏற்படுத்திக் கொள்வதாகும். அவ்வாறே, பெற்றுக் கொள்ளும் கடன் தொகைக்கு சகலரும் பொறுப்பு கூற வேண்டியுள்ளது. அதற்கான காரணம் குழுவினருக்கு நிதி தேவைப்படும் போது கடன் வழங்கப்படுவதாகும். குழு அங்கத்தவர்களின் சேமிக்கும் ஆற்றல் வரையறுக்கப்பட்டாமல் எவ்வளவு வேண்டுமானாலும் பணத்தை நிறுவனத்திடம் இருந்து மீண்டும் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் காணப்படுவதால் இந்தத் திட்டம் விசேடமானதாக கருதப்படுகிறது.

பெற்றுக் கொள்ளும் கடன் தொகையை மீண்டும் செலுத்தும் போதும் செலுத்த தவறும் சந்தர்ப்பங்களிலும் கடன் பெற்றவருக்கு பொறுத்தமான ஒரு முறையில் அவற்றை மீளச் செலுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல்.

நுண் நிதி முறையை கையாளும் போது, அவை தொடர்ந்து மாற்றங்களுக்கு உள்ளாகும் சமூக பொருளாதார காரணிகளும் அதற்கேற்றால் போல் எமது முறையில் மாற்றங்களை செய்ய வேண்டும். எனினும் இதனை மிகவும் சவாலான விடயமாக செய்ய வேண்டியுள்ளது. கிராமின் 2 முறையின் காணப்படக்கூடிய இந்த அடிப்படை குணாம்சங்கள் இந்த முறையை சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல சில வேளைகளில் தடையாக இருக்கலாம்.

கிராமிய வங்கி **(Village Banking)**
கிராம மட்டத்தில் கிராமத்தில் உள்ள குழுக்கள் ஒன்றிணைந்து ஆரம்பிக்கப்பட்ட வங்கிக் கிளை விசேடமான முறையாக இதனை நாம் குறிப்பிட முடியும். கிராமிய வங்கியின் முழுப் பொறுப்பும், நிர்வாகமும், அதனை ஆரம்பித்தவர்களால் முன்னெடுக்கப்படுகிறது. கிராமிய வங்கி முறையை ஆரம்பித்த பெருமை பின்கா (Finca) என்ற நிறுவனத்தையே சேரும்.
இன்று இந்த கிராமிய முறையை வழிநடத்திச் செல்வதில் Pro Mujor மற்றும் Freedom ஆகிய நிறுவனங்களே முன்னணியில் இருக்கின்றன.
கிராமிய வங்கி எண்ணக்கருவானது இரு நபர்களினால் முன்னெடுக்கப்படும் கொடுக்கல்வாங்கல் என்று கூறுவதற்கான காரணம் ஒரு குழுவொன்றுக்கே கடன் வழங்கப்படுவதும் கூட்டுறவு அடிப்படையில் செயற்படும் ஒரு அமைப்பாக காணப்படுவதாலாகும்.

குழு முறையில் சற்று சமாந்தரமாக செயற்படும் கூட்டுறவு முறையில் பல சிறப்பம்சங்கள் காணப்படுகின்றன. இந்தத் திட்டத்தில் அங்கத்தவர்களின் எண்ணிக்கை தொடர்பில் வரையறுக்கப்படவில்லை. அவ்வாறே, விசேட அழைப்புகள் எதுவுமின்றி அங்கத்தவர்கள் தங்களது சுய விருப்பின் பேரில் இதில் இணைந்து கொள்ள முடியும். சமூகங்களிடம் காணப்படும் வகுப்பு வேறுபாடு எதுவுமின்றி சமூக ஒற்றுமையுடன் இவ்வமைப்பில் இணைந்து கொள்ள முடியும். கூட்டுறவு முறைமை தொடர்பாக சகல அங்கத்தவர்களுக்கும் அறிவூட்டல் பயிற்சிகள் வழங்கப்படும். இவ்வாறான காரணங்களை பார்க்கும் போது கூட்டுறவு முறையானது எமக்கு தெளிவாக விளங்கும் ஓர் அம்சமாக இருப்பது ஜனநாயக சமூகமொன்றின் நிர்வாக செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு முறையாக பார்க்கப்படுகிறது.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு அமைப்பில் ஒளிவு மறைவின்றி ஒருமைப்பாட்டுடன் தொடர்புகளை பேணி ஒற்றுமையுடன் செயற்படுவதை காணக்கூடியதாக இருப்பது இதன் இன்னுமொரு விசேட அம்சமாகும்.
இவ்வாறு கூட்டுறவு முறையும் குழு முறையும் சமூகத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டிய கிராமிய வங்கி எண்ணக்கரு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் எமக்கு கீழுள்ள விடயங்களில் அவதானம் செலுத்த முடியும்.
கிராமிய வங்கியின் உரிமைத்துவம் ஒவ்வொரு நாளும் அங்கத்தவர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதனால், அங்கத்தவர்களின் நிதித் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட வங்கி என்ற அடிப்படையில் இந்த திட்டத்தை நாம் இலகுவாக அடையாளப்படுத்த முடியும். சமூக அந்தஸ்து தொடர்பாக இல்லாமல் சகலரும் கிராமிய வங்கி முறையில் இணைந்துக் கொள்வதை காணக்கூடியதாக இருக்கிறது. வறுமையில் உள்ள நபர்கள் முதல் பொருளாதார வாய்ப்புகள் உள்ளவர்களும் கிராமிய வங்கியில் அங்கத்தவர்களாக இருக்கின்றனர். இதனால், இதன் அங்கத்தவர்கள் அனைவரும் கிராமிய வங்கியின் உரிமையாளர்களாகவும் கொடுக்கல் வாங்கல் செய்யும் வாடிக்கையாளர்களாகவும் இருக்கிறார்கள்.

எந்தவொரு நன்மை பயக்கும் திட்டங்களிலும் சில குறைபாடுகள் இல்லாமலில்லை என்பது வேடிக்கையான விடயமல்ல. கிராமிய வங்கி முறையிலும் அவ்வாறான பல விடயங்கள் காணப்படுகின்றன. இது தொடர்பாக அடுத்த இதழில் ஆராய்ந்து பார்ப்போம்.



# கிராமின் சக்தி
# அவரின் வளர்ச்சி

கண்டி வீதியில் கிரில்லவல வீதியை நோக்கி சென்றுக் கொண்டிருக்கும் போது ஆச்சர்யமாக கலைப்படைப்புகள் பார்த்து கண்கள் சற்று இருண்டுவிடும். அவ்வாறு கைகளினால் செய்யப்பட்ட உருவங்கள், பௌத்த சிலைகள், பல்வேறு மனதை ஆனந்தப்படுத்தும் வரைபடங்கள் எமது கண்களில் என்றும் நிலைத்திருக்கும் வகையில் பலவகையான நினைவுகள் என்றும் மறக்க முடியாமலிருப்பதாலாகும். அந்தப் பாதையில் சென்று கொண்டிருக்கும் போது சற்று பின்நோக்கிய போது "சவிய அன்ட் கிராபிக்ஸ்" என்ற பெயரில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அழகிய கலைப்படைப்பு .... . . . . . . . .

"சார் எதைப் பார்த்தீர்கள். . . ." நீண்ட தாடியுடன் அன்பாக வினவிய அவரின் முகம், சிறியதோர் அறையில் இருந்து பேசிய அந்த வசனங்கள் இன்றும் நினைவில் இருக்கின்றது.

நான் மூர்த்தி. . . . அழகாக இருக்கிறது. . . .இவை அனைத்தும் உங்களால் நிர்மாணிக்கப்பட்டதா...?

நிச்சயமா . . . அங்குள்ள அனைத்தும் எமது வேலைத்தளத்தில் நிர்மாணிக்கப்பட்டவையாகும்... சிலவற்றை நாங்கள் வெளியில் இருந்து வாங்கி வந்தோம். . . . காட்சியறையின் பக்கமாக சிறிய மடுவத்திற்குள் பல்வேறு உருவங்களை நிர்மாணிக்கும் பலர் எம்மைப் பார்த்துக் கொண்டிருந்தனர். "இந்தப் பகுதியிலா நீங்கள் வசிக்கிறீர்கள்..."

இல்லை சேர். . நான் மத்தறை... திஹகொடை. பல வருடங்களுக்கு முன்னர் மத்தறையில் இருந்து கொழும்புக்கு வந்து பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கிய பின்னர் ஆரம்பிக்கப்பட்ட வியாபாராமாகும். எமது முயற்சியே இதற்கு பிரதான காரணமாகும். எமக்கு இந்தத் தொழிலை முன்னெடுத்துச் செல்வதற்கு எந்தவொரு வங்கியும் கடன் வழங்க முன்வரவில்லை.. ஒரே ஒரு நிறுவனம் மாத்திரமே எமக்கு உதவி செய்தது... அது பிரைம் கிராமின் நிறுவனமாகும்.

அவருடைய இறுதி வார்த்தைகள் என்னை பொறுமையிழக்கச் செய்த முகத்திரையாகும். பிரைம் கிராமின் நிறுவனத்துடன் இணைந்த எனது உறவு பாரம்பரியங்களை நினைவுறச் செய்த உதவிக்காகவேயாகும். அந்த சிறிய காட்சியறையின் பக்கத்தில் அமைந்த சிறிய கூடாரத்திற்குள் நுழைந்த போது எனக்கு ஏற்பட்ட அந்த அனுபவம் எனது ஆர்வத்தை மேலும் தூண்டக்கூடிய அவரின் முயற்சிக்கு கிடைத்த பெறுபேறாகவே பார்த்தேன். அவரின் பெயர் கசுன் ரத்னாயக்க. இரண்டு கோப்பைகளில் பானங்களை எடுத்து வந்து உபசரித்த ரசிகா நிரோஷனி அவருடைய கதையின் பிரதான கதாபாத்திரமாகும். அவள் அவரின் காதலியாகும். அவ்வாறில்லையானால் பிரைம் கிராமின் மற்றும் அவர்களுக்கிடையிலான தொடர்பினை கட்டியெழுப்பியது கிராமின் சமூகத்தினாலாகும். இவது அவர் மற்றும் அவளின் கதைகளாகும்.

மாத்தறை திககொடைதான் அவர்களின் சொந்த இடமாகும். ஒரே வைத்தியசாலையில், அதே நாளில் நாம் இருவரும் பிறந்தோம். எமது பெற்றோர் அக்காலப்பகுதியில் இருந்து வறுமையிலேயே வாழ்ந்து வந்தார்கள். நாம் இருவரும் ஒரே பாடசாலையில் கல்வி கற்றோம். ஒரே வகுப்பில். எமது தொடர்பு சற்று வித்தியாசமானது. சாதாரணதர வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருந்த போது எமது நட்பு காதலாக மாற்றமடைந்தது. எமது வீட்டில் பாரிய எதிர்ப்பு கிளம்பிய போதும் எமது காதலில் எந்தவித பிரச்சினையும் இருக்கவில்லை. எனது தந்தை சிற்பம் செதுக்கும் மூர்த்தியாகும். மிகவும் நல்லவர். அவ்வாறே நல்ல தேக ஆரோக்கியமான அவர் எனக்கு சிற்பம் வடிக்கும் சகல பயிற்சிகளையும் கற்றுக் கொடுத்த நல்லாசானாகும். அவ்வாறே நான் எவ்வளவுதான் நன்றாக சிற்பங்களை வடித்தாலும் எனது தந்தை இலகுவில் திருப்தி அடையமாட்டார். எனது தந்தையின் கூற்றுப்படி நான் அறிந்து கொண்ட விடயம் தான் நாம் செய்யும் வேலைகளை சரியாக செய்து குறைபாடுகள் இன்றி உலகை அறிந்து கொள்வதாகும். என்னை ஒரு சிற்பியாக மாத்திரம் செயற்படாது நல்ல வர்த்தகராகவும் இருக்க வேண்டுமென்பது எனது தந்தையின் நோக்கமாக இருந்தது. அவரின் தேவைக்கேற்ப நானும் செயற்பட்டேன். அந்த நாட்களில் நான் கற்றுக் கொண்டதே இன்று நான் இவ்விதம் வாழ்வதற்கு துணையாக இருக்கிறது. எமது காதலை எனது தந்தை ஏற்க மறுத்தார். இதனால், தந்தையோடு கோபித்துக் கொண்டு அவருக்கு தெரியாமல் கிராமத்தில் இருந்து வந்து விட்டோம். . . அது 2007ஆம் ஆண்டில்.

தந்தையின் மூர்த்தி வேலைத்தளமொன்று இருந்தது. . . ஆம் . . . இன்றும் அது காணப்படுகிறது. கதிர்காம ஆலயத்துக்கு செல்லும் வீதியின் பாரிய வளைவுக்கு அருகில் ரத்னாயக்க என்ட் கிராப்ட் நிறுவனம் காணப்படுகிறது. அது தந்தையின் காட்சியறையாகும். பல வருடங்களுக்கு பிறகு கதிர்காமத்துக்கு சென்று திரும்பி வரும்போது எதிர்பாரமல் ரத்னாயக்க அன்ட் கிராப்ட் நிறுவனத்தை மீண்டும் பார்ப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பம் உள்ளத்துக்கு கிடைத்த ஆறுதலாகும். நாம் கொழும்புக்கு வந்து கடவத்தையில் தங்கினோம். வீட்டில் இருந்து கொண்டு வந்த 800ரூபா மாத்திரமே எமது கையில் இருந்த சொத்தாகும். கடவத்தையில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து குடியிருப்பதே எமது நோக்கமாக இருந்தது. அந்த இடத்தில் நாம் டெட் பெயார்சலா தைத்து விற்பனை செய்வதென்று தீர்மானித்தோம். இருந்தாலும் அதற்கு பணவசதி இருக்க வில்லை. நாம் அந்தப் பயணத்தை டெட் பெயார்சல் உற்பத்தி செய்யும் இடங்களுக்குச் சென்று மாதிரி என்று கூறி டெட் பெயாஸ்லா கேட்டுக் கொண்டு ஒரு பாத்திரத்தில் போட்டுக் கொண்டு ஒவ்வொரு கடைக்கும் சென்று ஓடர் எடுத்து வருவதாகும். அந்த ஓடர்களுக்கு சரியாகும் டெட் பெயார்சலா உற்பத்தி செய்யும் இடங்களில் விற்பனை செய்து பணத்தை கொண்டு தருவதாக உறுதியளித்து வெளி டெட் பெயார்சலா கேட்கும் தொகைக்கு ஒவ்வொரு கடைக்கும் கொண்டு சென்று கொடுத்து அதற்கு அடுத்தநாள் அதற்கான பணத்தை வசூலிப்பேன். அது ஒரு நடைமுறையாகும்.

இவ்விதம் பணம் உழைத்து பின்னர் நாம் டெட் பெயார்ஸ்லா ஆரம்பித்தோம். ஆரம்பிக்கப்பட்ட சிறிது காலத்தில் ஊழியர்கள் பலரையும் சேவையில் ஈடுபடுத்தினோம். நாம் டெட் பெயார்ஸ்லா செய்து அவற்றைப் பெற்று ஒவ்வொரு மாகாணத்திலும் ஏதேனும் உற்சவங்கள் நடைபெறும் காலப்பகுதியில் அங்கு சென்று தனியான கடைகளை உருவாக்கி பொருட்களை விற்பனை செய்வதுடன் சில வேளைகளில் ஒருவாரம் அல்லது இரண்டு வாரம் தங்கியிருந்து மழை, வெயில் பாராது நாம் கடுமையாக உழைத்து வந்தோம். ஒரு காலப்பகுதியில் எனது மூத்த பிள்ளை கிடைக்கவிருந்த சந்தர்ப்பத்தில் மனைவி நான்கு நாட்கள் அந்த கூடாரத்தில் தங்கியிருந்து மழையில் நனைந்து என்னுடன் இருந்தார். அந்த நாட்களை ஒருநாளும் என்னால் மறக்க முடியாது. அந்தக் காலப்பகுதியில் ஹைஜெட் லொறியொன்றை வாங்கினோம். அதற்கு எனது மனைவியின் சகோதரி பணம் கொடுத்தார். இவ்விதம் படிப்படியாக எமது வியாபாராம் வளர்ச்சியடைந்து இரண்டு வருடங்களாகும் போது மாதாந்தம் ஒரு இலட்சம் வரை வருமானமாக பெறும் அளவுக்கு எமது வியாபாரம் வளர்ச்சியடைந்தது. அதன் பிறகு டெட் பெயார்ஸ்லா செய்வதை நிறுத்திவிட்டு எனக்கு தெரிந்த அனுபவமுள்ள மர வேலையை ஆரம்பித்தேன். கண்டி வீதியில் 3500ரூபா வாடகைக்கு சிறிய கடையொன்றை வாங்கி எனது தொழிலை ஆரம்பித்தேன். கடையை ஆரம்பித்த முதல் நாள் சிறிய அழகான மரவேளை கொண்ட புத்தர் சிலைகள் இரண்டும் இன்னும் சில சிற்பங்களும் காணப்பட்டன. இவற்றின் பெறுமதி ஒன்றரை இலட்சம் ரூபாவாகும். இவை மாத்திரமே எனது அந்தக் கடையில் இருந்தன. இவை எனது நண்பரிடம் வாங்கி வந்தவை. முடியுமானால் விற்று பணத்தை தருமாறு கூறினார்கள். நேரத்தைப் பார்த்தது மாத்திரம் தான். கடையை திறப்பதற்கு யாருக்கும் அழைக்கு விடுக்க வில்லை. கடையை திறந்த முதல் நாள் தமிழர் ஒருவர் முதன் முதலாக எனது கடைக்கு வந்தார். அவரின் பெயர் ராஜா. அவர் வந்து சிற்பத்தின் விலையைக் கேட்டார். நானும் விலையை கூறினேன். அதன் பின்னர் நான் அவரிடம், இன்று தான் நான் கடையை ஆரம்பித்துள்ளேன். நீங்கள் அனைத்து பொருட்களையும் பார்வையிட்டு உங்களின் விலையை கூறுங்கள். எவ்வளவு என்றாலும் பரவாயில்லை என்று கூறினேன். அதற்கு அவர், எனது கடையில் இருந்து அனைத்துப் பொருட்களையும் எடுத்துக் கொண்டு மூன்று இலட்சம் ரூபாவை தந்தார். நீங்கள் தொடர்ந்து இந்த வியாபாரத்தை சிறப்பாக கொண்டு செல்ல வேண்டுமென்று ஆசி கூறி சென்றுவிட்டார்.

அந்த சம்பவத்தை நினைக்கும் போது எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. அன்று கடவுள் வந்தது போன்ற நினைவு இன்றும் என் மனதில் இருக்கிறது. அன்று ஆரம்பித்த எனது வியாபாரம் இன்று இந்த அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளது. இதனிடையே இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னர் எனது வியாபாரத்தை சிறப்பாக கொண்டு நடத்துவதற்காக பல வங்கிகளுக்கும் சென்றேன். என்றாலும் ஒரு வங்கி கூட எனக்கு பணம் வழங்கவில்லை. நாம் இருப்பது வாடகை கடையில். வங்கியில் வைக்கும் அளவுக்கு எம்மிடம் சொத்துக்கள் இருக்கவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் தான் எனது மனைவியின் நண்பி பிரைம் கிராமின் நிறுவனம் தொடர்பாக எங்களிடம் கூறினார். அதன் பின்னர் நாங்கள் அதில் அங்கத்தவர்களானோம். முதல் தடவையாக பெரியளவில் கடனை பெற முடியாத போதும் 25,000ரூபா, 50,000 ரூபா, 75,000ரூபா, 100,000ரூபா என்ற அடிப்படையில் கடனைப் பெற்றுக் கொண்டோம். அவ்வாறே பிரைம் கிராமின் மியுலெஸி சேமிப்பு கணக்கில் பணம் கொடுத்து சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தோம். அந்த சேமிப்பினால் நாம் கார் ஒன்றை பெறுவதற்கு மிகவும் பிரயோசனமாக அந்தப் பணம் இருந்தது.

பாதை ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹைபிரிட் ரக மோட்டார் காரை கசுன் எமக்கு காட்டினார். இன்றுவரை அவரின் கீழ் பிரசித்திபெற்ற 7 சிற்பக் கலைஞர்கள் மரவேளை செய்வதில் ஈடுபட்டு வருகிறார்கள். முன்னர் கசுன், ரசிக்காவுக்கு கடன் வழங்க மறுத்த வங்கிகள் தற்போது தங்கள் சொந்த விருப்பின் பேரில் கடன் வழங்க முன்வந்துள்ளன. என்றாலும் கடந்த இரு தசாப்தங்களுக்கும் மேலாக வறுமைக் கோட்டில் வாழும் மக்களுக்காக சேவையாற்றுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட வங்கியாக இனங்காணப்பட்ட கிராமின் திட்டத்தின் உரிமையாளர்களான பிரைம் கிராமின் நிறுவனத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கை இன்றும் துளியளவும் குறையவில்லை.

> "சொத்துக்கள் இன்மையால் வங்கிகள் புறக்கணித்த போது வறுமையை சொத்தாக நினைத்து எமக்கு கை கொடுத்தது பிரைம் கிராமின் நிறுவணம் மாத்திரமே"







ஆக்கம்
மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
படம் லக்ஷ்மன் குமாரதுங்க




## முகாமையாளர்களின் வகைகள்

முகாமையாளர்கள் மேற்கொள்ளும் பணிகளின் அடிப்படையில் பின்வருமாறு பிரித்து பார்க்க முடியும்

1. **அதிகாரங்களின் அடிப்படையில்**
   மேம்படுத்தல் அடிப்படையில்
   சிறந்த முகாமையாளர்கள் (Top Manager)
   மத்திய முகாமையாளர்கள் (Middle Manager)
   கீழ்மட்ட முகாமையாளர்கள் / முதல் நிலை முகாமையாளர்கள் (Lower Manager)

2. **துறை விடயப்பரப்பு / விசேட**
   துறைகளின் அடிப்படையில்
   செயற்பாட்டு முகாமையாளர் (Operation Manager)
   சந்தைப்படுத்தல் முகாமையாளர் (Marketing Manager)
   நிதி முகாமையாளர் (Finance Manager)
   மனித வள முகாமையாளர் (Human Resource Manager)
   ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமையாளர் (Research and Development Manager)
   ஏனைய துறைகளுடன் தொடர்புடைய முகாமையாளர்கள் (உதாரணம்: மக்கள் தொடர்பு முகாமையாளர் / தகவல் முகாமையாளர்)

3. **வேலைத் தன்மையின் அடிப்படையில்**
   வரிசை முகாமையாளர் (Line Manager)
   நிறுவனத்தின் முதல் நிலை செயற்பாடுகளுடன் நேரடியான தொடர்பினை கொண்டுள்ள முகாமையாளர்களை வரிசை முகாமையாளர்கள் என குறிப்பிடலாம். நிதி வளம், கடன் வழங்கல், கடனை வசூலித்தல் போன்ற செயற்பாடுகளில் இவர்கள் ஈடுபடுவார்கள்.

1. **பணியாள் முகாமையாளர் (Staff Manager)**
   விசேட துறைகளை முகாமைத்துவம் செய்வதற்காக நியமிக்கப்படும் முகாமையாளர்களை பணியாள் முகாமையாளர் என அடையாளம் காணப்படுகிறது. நிதி செயற்பாடு, மனித வளம், ஆய்வு மற்றும் அபிவிருத்தி, விளம்பரம் மற்றும் முன்னேற்றம், பங்குச்சந்தை ஆய்வு, தரக்கட்டுப்பாடு போன்ற செயற்பாடுகளுடன் இவர்கள் தொடர்புடையவர்களாகும்.

**சிறந்த முகாமையாளராவதற்கு தேவையான அடிப்படை தகுதிகள்**
செயல்திறன் மற்றும் உற்பத்தி திறன் கொண்ட முகாமையாளர்களை சிறந்த முகாமையாளர்களாக அடையாளம் காண முடியும். அவர்களிடம் பின்வரும் மூன்று அம்சங்கள் காணப்பட வேண்டும்.

1. **அறிவு**
   கல்வி மற்றும் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதே அறிவு எனப்படுகிறது. ஆகவே, எதனைச் செய்ய வேண்டும், எவ்வாறு செய்ய வேண்டும் என்ற அறிவு காணப்பட வேண்டும். இவற்றை கற்றுக் கொள்வதும் அனுவத்தினால் பெற்றுக் கொள்ள முடியும்.

2. **திறமை**
   ஏதேனும் செயலை செய்வதற்கான திறமை. இவ்வாறான திறமை உள்ளவர்களை தனியாக அடையாளம் கண்டு வழங்க வேண்டிய அதி உயர் திறமைகளைக் கொண்ட மன தைரியம் கொண்ட மனித மற்றும் தொழில்நுட்பத்துடன் நேர முகாமைத்துவம், தொலைத்தொடர்பு, உலகளாவிய முகாமைத்துவம் என்பன விருது முகாமையாளர்களிடம் காணப்பட வேண்டும்.

3. **சாதகமான மனப்பாங்கு**
   ஒரு விடயத்தைச் செய்ய முடியுமென்ற எண்ணத்துடன் கருமம் ஆற்றுவதாகும். இவற்றை கவனித்து நம்பிக்கையின் அடிப்படையில் பல்வேறு விடயங்களையும் ஏற்றுக் கொள்ளும் மன வலிமை காணப்பட வேண்டும்.

**சிறந்த முகாமையாளராவதற்கு தேவையான அடிப்படை தகுதிகள் செயல்திறன் மற்றும் உற்பத்தி திறன் (அட்டவணை 01)**

- அறிவு
  - செய்முறை தொடர்பான அறிவு
  - எப்படி செய்வது தொடர்பான அறிவு
- திறமை
  - சாதாரண திறமை
    - கருமமாற்றக்கூடிய திறமை
    - தொழில்நுட்ப திறமை
    - மனிதவள திறமை
  - விசேட திறமை
    - மொழி தொடர்பான
    - தொழில் தொடர்பான
    - இலக்கு தொடர்பான
    - உறவு தொடர்பான
    - கருத்து தொடர்பான
    - முன்வருதல் தொடர்பான
- சாதகமான மனப்பாங்கு
  - தொழில் தொடர்பான மனப்பாங்கு
  - நபர்கள் தொடர்பாக உள்ளார்ந்த மனப்பான்மை
  - சுற்றாடல் தொடர்பான உள்ள உள்ளார்ந்த மனப்பான்மை
  - தன்மீதுள்ள உள்ளார்ந்த மனப்பான்மை


சந்தகெலும் ஜயதுங்க,
கணக்காளர்,
பிரைம் கிராமின்
மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்.



## "மெஹெவர" உதவி நிதியிலிருந்து நன்மை பெற்றவர்கள். . .

உங்களது நன்கொடையால் ஆரம்பிக்கப்பட்ட மெஹெவர உதவி நிதியம் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் எமக்கு கிடைக்கப் பெற்ற நூற்றுக்கணக்கான விண்ணப்பங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது. இவ்விதம் உதவிகள் வழங்கப்பட்டவர்களின் விபரங்களை கீழே தருகின்றோம்.



01. குருநாகலை கிளை
அங்கத்தவர்:- கே. மசாகி
உதவி பெற்றவர்:- கே. மசாகி (அங்கத்தவர்)
உதவி பெற்ற காரணம்: வியாபாரம் தீயினால் சேதமேற்பட்டது.
உதவித் தொகை: ரூ. 15,000
மீண்டும் பழைய நிலைக்கு வருவதற்காக



02. வவுனியாக கிளை
அங்கத்தவர்: ஏ. ராமேஷ்வரி
உதவிபெற்றவர்: அர்ஜுன (கணவர்)
உதவி பெற்ற காரணம்: வைத்திய செலவுக்காக
உதவித்தொகை: ரூ.10,000



03. புத்தளம் கிளை
அங்கத்தவர்: யு.கே. ரோஸ்மேரி
உதவிபெற்றவர்: யு.கே. ரோஸ்மேரி (அங்கத்தவர்)
உதவி பெற்ற காரணம்: இருபாதங்களும் செயல் இழந்தமை
உதவித்தொகை: ரூ.5,750 (சக்கர நாட்காளி வாங்குவதற்காக)



04. கம்பஹா கிளை
அங்கத்தவர்: ரி.டி. பிரேமவதி
உதவிபெற்றவர்: ரி.டி. பிரேமவதி (அங்கத்தவர்)
உதவி பெற்ற காரணம்: வைத்திய செலவுக்கு
உதவித்தொகை: ரூ.10,000



05. கண்டிக் கிளை
அங்கத்தவர்: டி.ஜி. ரம்யலதா
உதவிபெற்றவர்: டி.ஜி. ரம்யலதா (அங்கத்தவர்)
உதவி பெற்ற காரணம்: வைத்திய செலவுக்காக
உதவித்தொகை: ரூ.10,000



06. நிக்கவரெட்டிய கிளை
அங்கத்தவர்: ஆர்.ஏ. தரங்க
உதவிபெற்றவர்: பி.எம். அமித் (கணவர்)
உதவி பெற்ற காரணம்: பின்பக்க முதுகுவலி
உதவித்தொகை: ரூ.10,000



07. நிக்கவரெட்டிய கிளை
அங்கத்தவர்: ஜீ.கே. சமந்தி
உதவிபெற்றவர்: ஜே.எம்.பிரதீப் (கணவர்)
உதவி பெற்ற காரணம்: வைத்திய செலவுக்காக
உதவித்தொகை: ரூ.10,000



08. நிக்கவரெட்டிய கிளை
அங்கத்தவர்: டபிள்யு.எஸ். தம்மிகா
உதவிபெற்றவர்: டபிள்யு.எஸ்.தம்மிகா (அங்கத்தவர்) (அங்கத்தவரின் குடும்ப உறுப்பினர்கள் விபத்தில் சிக்கியமை)
உதவி பெற்ற காரணம்: வைத்திய செலவுக்காக
உதவித்தொகை: ரூ.20,000



08. சிலாபம் கிளை
அங்கத்தவர்: டபிள்யு.டி.என்.குமாரி
உதவிபெற்றவர்: டபிள்யு.டி.என்.குமாரி (அங்கத்தவர்)
உதவி பெற்ற காரணம்: வீடு தீப்பற்றியமை
உதவித்தொகை: ரூ.10,000 (வீட்டை திருத்தியமைக்க)

மெஹெவர உதவி நிதியம் இன்னும் சிறப்பாக செயற்படுவதற்கு உங்களது ஆக்கபூர்வமான யோசனைகளை உள்வாங்கப்படுவதுடன் உங்களுடைய கருத்துக்களை 0710292018 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு சுதேஷ் பெரேரா என்பவருக்கு அனுப்பி வைக்கவும்.

பக்கம் 3


சிறந்த வருகையாளர்களுக்கான விருதினைப் பெற்ற எரங்க மற்றும் ஜயவினோதன்,


சிறந்த விற்பனைப் பிரதிநிதி விருதினைப் பெற்றவர்கள் (சாதாரண, சேமிப்பு மற்றும் நிலையான) சந்தருவன், கிறிசாந்தன்


துஷார வருடத்தில் வளர்ந்துவரும் நிறைவேற்று உத்தியோகத்தர்கள்,


வளர்ந்துவரும் கிளை அவிஸ்ஸாவளை


ஸ்ரீ காந்தன் சிறந்த வெளிக்கள நிறைவேற்று அதிகாரி


வருடத்தின் சிறந்த கிளை...
மூன்றாமிடம் நீர்கொழும்பு கிளை


வருடத்தின் சிறந்த கிளை...
இரண்டாமிடம், புத்தளம் கிளை






2014ஆம் ஆண்டின் பிரைம் கிராமின் சிறந்த கிளை நகரக் கிளை

கிளையில் உதவி முகாமையாளராக பதவி உயர்த்தப்பட்டேன். அந்த ஆண்டின் இடையில் எமது கிளை முகாமையாளர் உட்பட சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் 5 பேர் நிறுவனத்தில் இருந்து விலகிச் சென்றார்கள். அவ்வாறே இருவர் பதவி உயர்வு பெற்று சென்றனர். மேலும் ஒருவர் பல்கலைக்கழக அனுமதி பெற்று சென்றுவிட்டார். கிளையில் 9 பேர் மட்டுமே எஞ்சியிருந்தனர். முகாமையாளர் என்ற வகையில் எனக்கு பாரிய பொறுப்புகள் காணப்பட்டன. எஞ்சியிருந்த ஒரு சிலருடன் புதிய உத்தியோகத்தர்களுடன் அவர்களுக்கு பயிற்சி வழங்கி ஒரு குழுவாக செயற்படும் சவாலை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

2013ஆம் ஆண்டு எமது கிளை 8ஆம் இடத்தில் இருந்தது. அந்த வருடத்தின் வருடாந்த கூட்டத்தில் அடுத்த வருடம் எமது கிளையை முதலாவது இடத்துக்கு கொண்டுவர வேண்டுமென்று நினைத்துக் கொண்டோம். 2014ஆம் ஆண்டு அந்த இலக்கை அடையக்கூடியதாக இருந்தது. அந்த வெற்றிக் களிப்பு மற்றும் ஆனந்தம் எனது குழுவுக்கும், எமது அங்கத்தவர்களுக்கும் எமக்கு உதவி செய்த அனைவருக்கும் உரித்தாகும்.

**மிகவும் துன்பமான விடயம் என்று கூறினால் பல விடயங்களை**

சொல்லலாம். அதற்கு நான் இவ்வாறு பதிலளிக்கிறேன். 2008ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் நாங்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது. நாங்கள் நிறுவனத்துக்கு வந்த முதல் வருடம் என்பதால் எம்மால் இந்த நிறுவனத்தை சிறப்பாக நடாத்திச் செல்ல முடியுமா என்ற சந்தேக உணர்வு எம்மிடம் காணப்பட்டதால் நிறுவனத்தை மூடிவிடுவார்களோ என்ற அச்சம் காணப்பட்டது. இந்த உணர்வு ஒவ்வொரு நாளும் நிறுவனத்துக்கு வரும்போது இருந்தது. நான் மீண்டும் வயலுக்கு சென்று அப்பாவுக்கு உதவி செய்து, வயல் வேலையில் ஈடுபட வேண்டியேற்படுமோ என்ற பயமும் என்னில் இருந்தது. அவ்வாறான சோகம் நிறைந்த காலமாக எனது நிறுவன முதல் காலப்பகுதியை குறிப்பிடலாம். மிகவும் துன்பமான விடயம் என்று கூறினால் பல விடயங்களை சொல்லலாம். அதற்கு நான் இவ்வாறு பதிலளிக்கிறேன். 2008ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் நாங்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது. நாங்கள் நிறுவனத்துக்கு வந்த முதல் வருடம் என்பதால் எம்மால் இந்த நிறுவனத்தை சிறப்பாக நடாத்திச் செல்ல முடியுமா என்ற சந்தேக உணர்வு எம்மிடம் காணப்பட்டதால் நிறுவனத்தை மூடிவிடுவார்களோ என்ற அச்சம் காணப்பட்டது. இந்த



உணர்வு ஒவ்வொரு நாளும் நிறுவனத்துக்கு வரும்போது இருந்தது. நான் மீண்டும் வயலுக்கு சென்று அப்பாவுக்கு உதவி செய்து, வயல் வேலையில் ஈடுபட வேண்டியேற்படுமோ என்ற பயமும் என்னில் இருந்தது. அவ்வாறான சோகம் நிறைந்த காலமாக எனது நிறுவன முதல் காலப்பகுதியை குறிப்பிடலாம்.

மாற்ற வேண்டுமென நினைக்கும் . . . .

இந்தத் துறையில் நான் கற்றுக் கொண்டதைவிட கற்க வேண்டிய விடயங்கள் பல உள்ளன. அவற்றை அறிந்து கொள்ள வேண்டும். எம்மில் காணப்படும் குறைகளை அறிந்து கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

**முதல் காதல் வாழ்க்கையில் ஏற்படுத்திய மாற்றம்...**

எனது முதல் காதல் தொடர்பு மண வாழ்க்கையில் நிறைவுக்கு வந்தது. அவள் எனக்கு உறவுக்கார பெண். ஒரே பாடசாலையில் நாமிருவரும் கல்வி கற்றோம். நான் தரம் 10இல் கற்ற போது அவள் 9ஆம் தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்தாள். நான் எனது விருப்பத்தை தெரிவித்த போது அவளும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டாள். எமது காதலால் எங்கள் கற்றல் செயற்பாடு ஒருகாலமும் இடையூறாக இருக்கவில்லை. அவளின் பெயர் ரசிக்கா குமாரி ஜயசிங்க. குமாரி உயர்தரம் சித்தி பெற்று றுகுணு பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டாள். சிங்கள பாடத்தில் விசேட பட்டத்தையும் பெற்றுக் கொண்டாள். அதன் பிறகு நாம் இருவரும் திருமணம் முடித்துக் கொண்டோம். தற்போது ஆசிரியையாக கடமையாற்றுகிறாள்.

எமக்கு ஒரு குழந்தை இருக்கின்றது. அவள் லசினி மேதாவி ஆதித்யா.

**அவளிடம் காணப்படும் விசேட பண்பு**

குமாரி மிகவும் இளகிய மனம் படைத்த அன்பானவள்.

**பிடித்த பாடகர் :** சுனில் எதிரிசிங்க

**பாடல்:** தெவனி புதும் லெச

**திரைப்படம்:** அண்மையில் திரைப்படம் பார்ப்பதற்கு நேரம் கிடைக்கவில்லை

**நாவல்:** விசேடமாக எந்தவொரு புத்தகமும் இல்லை. வாழ்க்கையில் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பான புத்தகங்களை படிப்பதில் ஆர்வம் காட்டுவேன்.

**எதிர்கால இலக்கு:** வாடகை வீட்டில்தான் இருக்கிறேன். கொழும்பில் வீடொன்றை அமைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை எனக்கு இருந்தது. அந்தக் கனவு தற்போது நனவாகப் போகிறது. சிறுவயதில் நான் பெற்ற துன்பம் எனது பிள்ளைக்கு கிடைக்கக் கூடாது. அவளை நல்ல நிலைக்கு கொண்டு செல்வதே எனது எதிர்ப்பார்ப்பாகும்.

**செய்த தவறுகளை நினைத்துக் கொண்டிருந்தால் வாழ்க்கையில் முன்னேற்றம் இருக்காது**

# பிரைம் கிராமின் களுத்துறை கிளை புதிய இடத்தில்

பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட் கிளைகளின் நான்காவது கிளையான பிரைம் கிராமின் களுத்துறை கிளை கடந்த ஜனவரி மாதம் 29ஆம் திகதி காலை. 9.32 மணி சுபநேரத்தில் புதிய இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

பல காலமாக இல. 294, காலி வீதி, களுத்துறை வடக்கு என்ற முகவரியில் செயற்பட்டு வந்த களுத்துறை கிளை நவீன வசதிகளுடன் வாடிக்கையாளருக்கு மேலும் சிறப்பான சேவை வழங்கும் நோக்கத்துடன் களுத்துறை வடக்கு, காலி வீதி இல. 427 என்ற முகவரியில் புதிய செயற்பட ஆரம்பித்துள்ளது. புதிய கிளையின் ஆரம்ப நிகழ்வில் பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்டின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் / பணிப்பாளர் சமிந்த பிரபாத் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இந்நகிழ்வில் பிரதி பொது முகாமையாளர்களான அனஸ்லி பெர்ணாந்து, பிமல் செனவிரத்ன ஆகியோருடன் உதவி பொது முகாமையாளர்களான கமல் பிரியங்க மற்றும் பெத்தும் சம்பத் குரேவும் பிரதேச முகாமையளார்கள், களுத்துறை கிளை உத்தியோகத்தர்கள், வாடிக்கையாளர்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். புதிய கிளையின் கொடுக்கல் வாங்கல் நிகழ்வுக்கு சமாந்தரமாக நவம்பர் 28ஆம் திகதி சேமிப்பு பழக்கத்தை ஊக்குவித்தல் தொடர்பான சந்தைப்படுத்தல் வேலைத்திட்டமொன்றும் களுத்துறை நகரை முன்னிலைப்படுத்தி நடைபெற்றது.




## சுபமங்களம்

புதுவருட ஆரம்பத்துடன் பிரைம் கிராமின் நிறுவன உத்தியோகத்தர்கள் பலர் மண வாழ்க்கையில் இணைந்து கொண்ட காலமாக கருதப்படுகிறது. அவர்களில் பலர் தலைமையகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது விசேட விடயமாகும். இம்முறை "மெஹவர" சுப மங்களம் பகுதியில் மணவாழ்க்கையில் இணைந்து கொண்ட எமது கிளை அங்கத்தவர்கள் சிலரின் படங்களை கீழே காணலாம்.







பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்டின் தலைமையகத்தில் கணக்குப் பிரிவில் சிரேஷ்ட கணக்காய்வு நிறைவேற்று உத்தியோகத்தரான துஷான் ரத்னநாயக்க அவர்களும் அனுஷா சியாமலி அவர்களும் சுபவாழ்வில் கடந்த டிசம்பர் 01ஆம் திகதி இணைந்து கொண்டனர்.

திவுலபிட்டிய செனூரி மண்டபத்தில் ஜனவரி 15ஆம் திகதி மலையக பாரம்பரியங்களுக்கு அமைய திருமண வாழ்வில் இணைந்து கொண்ட பிரைம் கிராமின் தலைமையக உதவி கிளை இணைப்பாளரான அமில சஞ்சீவ அவர்களும் துலீகா ஹர்ஷினி அவர்களையும் படத்தில் காணலாம்.

பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்டின் தலைமையகத்தில் சேவையாற்றும் உதவி பொதுமுகாமையாளரான பிரபாத் கத்ரியாராச்சி அவர்களும் டினாலி நிஸ்ஸங்க அவர்களும் ஹால்தண்டுவன புனித மரியா ரோமானு கத்தோலிக்க தேவாலயத்தில் திருமண பந்தத்தில் கடந்த ஜனவரி 24ஆம் திகதி இணைந்து கொண்டார்கள்.

**மண வாழ்க்கையில் இணைந்து கொண்ட பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறுவன அன்பர்களுக்கு உத்தியோகத்தர்கள் சபை சார்பில் மணமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.**

## Happy Birthday

மார்ச் மாதத்தில் பிறந்த தினத்தை கொண்டாடும் பிரைம் கிராமின் நிறுவன சகோதர உத்தியோகத்தர்களுக்கு எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம் !

| பெயர் | மாதம் | கிளை |
|---|---|---|
| திரு. ஆர்.எம். மஹிந்த திஸ்ஸ | மார்ச் 1 | தலைமையகம் |
| திரு. லசந்த குமார் | மார்ச் 01 | மஹியங்கனை |
| திரு. சஹன் ரசாஞ்சன | மார்ச் 01 | பொலன்னறுவை |
| திருமதி நிலூஷா ரோசனி | மார்ச் 01 | அவிஸ்ஸாவளை |
| திரு. மதுசாந்த அத்தநாயக்க | மார்ச் 01 | நுவரெலியா |
| திரு. நிலுக மதுசங்க | மார்ச் 01 | பதவிய |
| திரு. சமீர சம்பத் | மார்ச் 02 | கடுவளை |
| திரு. ரங்கஜீவ பண்டார | மார்ச் 02 | கேகாலை |
| திரு. சிசிர சுசுந்த | மார்ச் 02 | பலாங்கொடை |
| திரு. அமில பண்டார | மார்ச் 02 | கண்டி |
| திரு. நிலந்த குமார | மார்ச் 02 | குளியாபிட்டிய |
| திருமதி உடுவெல்ல | மார்ச் 02 | தலைமையகம் |
| திரு. மங்கள | மார்ச் 02 | திருகோணமலை |
| திரு. துஷான் எரங்க | மார்ச் 02 | மதவாச்சி |
| திரு. சமிந்த புஷ்பகுமார | மார்ச் 03 | வெலிமடை |
| திரு. தனுஷ்க பிரியதர்ஷன | மார்ச் 03 | ஹம்பாந்தோட்டை |
| திரு. கமல் பிரியங்க | மார்ச் 04 | தலைமையகம் |
| திரு. தென்னக்கோன் | மார்ச் 04 | கல்கமுவ |
| திரு. புத்திக தந்திரிகே | மார்ச் 05 | தலைமையகம் |
| திரு. யாப்பா குலதுங்க | மார்ச் 05 | நாவலப்பிட்டி |
| திரு. சாலித தென்னக்கோன் | மார்ச் 06 | கண்டி |
| திரு. சஜித் கோசல | மார்ச் 06 | நீர்கொழும்பு |
| திரு. சமீர உதயங்க | மார்ச் 07 | மத்துகம |
| திரு. ஹசித குணசிங்க | மார்ச் 07 | இரத்தினபுரி |
| திருமதி சந்தமாலி கருணாரத்ன | மார்ச் 07 | மொனராகலை |
| திரு. ராசலிங்கம் ராஜசீலன் | மார்ச் 07 | எம்பிலிபிட்டி |
| திரு. தீப்தி குமார | மார்ச் 08 | கேகாலை |
| திரு. ஹேமந்த குமார | மார்ச் 08 | தலைமையகம் |
| திரு. சரத் குமார | மார்ச் 08 | கல்கமுவ |
| திரு. சானக்க சத்துரங்க | மார்ச் 08 | நகரக்கிளை |
| திரு. பெத்தும் சிந்தக | மார்ச் 08 | காலி |
| திரு. துஷார ஜயசேன | மார்ச் 08 | அநுராதபுரம் |
| திரு. அசோக செனவிரத்ன | மார்ச் 08 | ஹோமகம |
| திரு. இந்துனில் சமிந்த | மார்ச் 09 | புத்தளம் |
| திரு. மாயவன் தினேஷ் | மார்ச் 09 | முல்லைத்தீவு |
| திரு. லக்மால் பிரசாத் | மார்ச் 10 | குளியாபிட்டி |
| திரு. நிரோஷன் சந்திரசிறி | மார்ச் 11 | தலைமையகம் |
| திரு. துஸான் ரத்னாயக்க | மார்ச் 11 | தலைமையகம் |
| திரு. அசங்க பிரதீப் குமார | மார்ச் 11 | தலைமையகம் |
| திரு. இசான் உமயங்க | மார்ச் 11 | பலாங்கொடை |
| திரு. உதார கெலும் | மார்ச் 12 | பதவிய |
| திரு. ரி. ஜெயவினோதன் | மார்ச் 12 | திருகோணமலை |
| திரு. லஹிரு பிரகீத் | மார்ச் 12 | புத்தளம் |
| திரு. ரங்கனாத் தஸநாயக்க | மார்ச் 13 | அம்பாறை |
| திரு. நிலுபுல் விமலதாஸ | மார்ச் 13 | மதவாச்சி |
| திரு. தமீர சானக்க | மார்ச் 14 | தலைமையகம் |
| திரு. சமன்குமார | மார்ச் 14 | பதவிய |
| திரு. ஜி.ஜி. விக்ரமசிங்க | மார்ச் 14 | எம்பிலிபிட்டி |
| திரு. ஜீவன் நிவன்தக | மார்ச் 14 | பலாங்கொடை |
| திரு. லலித் வீரசிங்க | மார்ச் 15 | தலைமையகம் |
| திரு. ரி. செந்தூரன் | மார்ச் 15 | தலைமையகம் |
| திரு. ரவிந்துதேவ சஞ்ஜேகான் | மார்ச் 15 | மட்டக்களப்பு |
| திரு. பிரசாத் நளிந்த | மார்ச் 15 | கம்பஹா |
| திரு. சம்பத் உதய குமார | மார்ச் 16 | கலவான |
| திரு. சுரேஷ் பிரியங்கர | மார்ச் 16 | ஜாஎல |
| திரு. கசுன் உபேந்திர | மார்ச் 17 | கேகாலை |
| திரு. ஜனித் தனுஷான் | மார்ச் 17 | வத்தளை |
| திரு. பிரசாந்த தில்ருக் | மார்ச் 18 | தலைமையகம் |
| திரு. மானெல் பத்மசிறி | மார்ச் 18 | நிட்டம்புவ |
| திரு. லஹிரு ரசாங்க | மார்ச் 19 | ஜாஎல |
| திரு. இசுரு புத்திக | மார்ச் 19 | தலைமையகம் |
| திரு. அநுராத எபாசிங்க | மார்ச் 20 | மொரட்டுவை |
| திரு. கிறிசாந்த ராஜபக்ஷ | மார்ச் 20 | தலைமையகம் |
| திரு. மஹிர பண்டார | மார்ச் 21 | குருநாகல் |
| திரு. இந்துநில் டி அல்விஸ் | மார்ச் 21 | அநுராதபுரம் |
| திரு. தமித் பிரியங்கர | மார்ச் 21 | அநுராதபுரம் |
| திரு. பிரகீத் சானக்க | மார்ச் 21 | வத்தளை |
| திரு. பிரசாத் சில்வா | மார்ச் 22 | நீர்கொழும்பு |
| திரு. சுமிந்த ஶ்ரீலால் | மார்ச் 22 | பலாங்கொடை |
| திரு. கசுன் சாமிகர | மார்ச் 22 | நிகரரெட்டிய |
| திரு. பிரபாஸ் மேனக | மார்ச் 22 | மொனராகலை |
| திரு. கே.ஏ. விஜித் | மார்ச் 23 | பெலியத்தை |
| திரு. நிரோஷன் ரங்கல்ல | மார்ச் 23 | கேகாலை |
| திரு. கிறிஷான் மலிந்த | மார்ச் 23 | புத்தளம் |
| திரு. கசுன் சத்துரங்க | மார்ச் 23 | கண்டி |
| திரு. கயந்த குணதிலக | மார்ச் 23 | கண்டி |
| திரு. மதுசான் பெர்ணாந்து | மார்ச் 23 | நீர்கொழும்பு |
| திரு. நுவன்த முனசிங்க | மார்ச் 23 | மஹியங்கனை |
| திரு. துமிந்த பிரசன்ன | மார்ச் 24 | கேகாலை |
| திரு. அமில கிறிஸ்டி | மார்ச் 24 | கம்பஹா |
| திரு. சஜித் மந்திரபதி | மார்ச் 24 | நிக்கரெட்டிய |
| திரு. பிரசன்ன ஆரியரத்ன | மார்ச் 24 | எம்பிலிபிட்டிய |
| திரு. ஹர்ச சம்பத் | மார்ச் 25 | தலைமையகம் |
| திரு. எஸ். ரொஸான் | மார்ச் 26 | தலைமையகம் |
| திரு. பிரியன்த பிரேமகுமார | மார்ச் 26 | கடுவலை |
| திரு. சாலிந்த அபேசிங்க | மார்ச் 26 | கண்டி |
| திரு. தியாகராஜா மோகதாஸன் | மார்ச் 26 | கந்தளாய் |
| திரு. ருவன் பெர்ணாந்து | மார்ச் 27 | தலைமையகம் |
| திரு. சாமர ரத்னாயக்க | மார்ச் 27 | கலவானை |
| திரு. உசான் இந்திக்க குமார | மார்ச் 27 | தலைமையகம் |
| திரு. பீ. மோகன்ராஜ்மார்ச் | மார்ச் 27 | நுவரெலிய |
| திரு. சின்னய்யா ஸ்வரசிங்கம் | மார்ச் 27 | நுவரெலிய |
| திரு. சுசில் பிரியந்த | மார்ச் 27 | நிக்வரெட்டிய |
| திரு. பி. அனோஜன் | மார்ச் 27 | வவுனியா |
| திருமதி உதயங்கனி திலகரத்ன | மார்ச் 27 | மஹியங்கனை |
| திரு. பிரபாத் மதுசங்க | மார்ச் 27 | குருநாகலை |
| திரு. வருண சாந்த | மார்ச் 27 | பலாங்கொடை |
| திரு. துஷார ரணபாகு | மார்ச் 28 | தலைமையகம் |
| திரு. அலோசியஸ் ஜெஸ்டின் | மார்ச் 28 | முல்லைத்தீவு |
| திரு. சந்திக பெரேரா | மார்ச் 28 | நகரக்கிளை |
| திரு. தரிந்து லியனகே | மார்ச் 28 | கம்பஹா |
| திரு. ரணில் பண்டார | மார்ச் 29 | தலைமையகம் |
| திரு. டி.எம். தஸநாயக்க | மார்ச் 29 | கல்கமுவ |
| திரு. சஞ்சீவ பிரபாத் | மார்ச் 30 | தலைமையகம் |
| திரு. குமார கோரலகே | மார்ச் 30 | தலைமையகம் |
| திரு. ரி. கிறிசாந்தன் | மார்ச் 30 | கந்தளாய் |
| திரு. கிறிசாந்த நளிந்த | மார்ச் 31 | தலைமையகம் |
| திரு. ஜீ. மதுசங்க | மார்ச் 31 | பண்டாரகம |
| திரு. பிரபாத் குமார | மார்ச் 31 | பொத்துவில் |

மெஹெவர
பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்
இல. : 168, நாவல வீதி, நுகெகொடை
தொலைபேசி: 0112176262 பெக்ஸ் : 0112825843
மின்னஞ்சல்: manjula.p@primegrameen.lk
இணையம்: www.primegrameen.com
பணிப்பாளர்: சமிந்த பிரபாத் (முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர்)
பிரதம ஆசிரியர்: மஞ்சுள பிரபாத் ஹெட்டியாரச்சி
பக்க வடிவமைப்பு: கே.டி. ஷமில சிந்தக (அர்ஜூன கிராபிக்ஸ் (தனியார்) நிறுவனம்
கணணி தட்டெழுத்து உதவி: உதாரி தர்மவர்தன / உதார தனஞ்சய
படப்பிடிப்பு: லக்ஷ்மன் குமாரதுங்க